# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

| துணர் | திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௮௯ | மலர் |
|---|---|---|
| ௩௪ | விளம்பி, புரட்டாசி<br>1958 செப்டம்பர், அக்டோபர். | ௬ |

## தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டாராய்ச்சி.

S. திருஞானசம்பந்தன், M. A.,
[ வரலாற்று விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம். ]

தஞ்சைப் பெரிய கோயில் என்று வழங்கும் இராசராசேச்சுவரத்திலுள்ள கல்வெட்டுக்கள், அரசாங்கக் கல்வெட்டிலாகா அறிஞர்களால் படி எடுக்கப்பெற்றுத் 'தென்னிந்தியக் கல்வெட்டுக்கள்' என்ற புத்தகம் இரண்டாம் தொகுதியில் ஆங்கில மொழிபெயர்ப்போடும் வரலாற்ருராய்ச்சிக் குறிப்புக்களோடும் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து அத்திருக்கோயிலைப்பற்றியும் அதனை எடுப்பித்த முதல் இராசராச சோழனைப்பற்றியும் ஆங்கிலத்திலும் தமிழிலும் கட்டுரைகளும் தனி நூல்களும் அறிஞர் பலர் எழுதி வெளியிட்டிருக்கின்றனர். தமிழ்ப் பொழிலில் வித்வான் திரு. வை. சுந்தரேச வாண்டையாரும் 'தஞ்சை இராசராரேச்சுரக் கல்வெட்டு வரலாறு' என்ற கட்டுரையொன்றைத் தொடர்ந்து எழுதியிருத்தல் காணலாம்.

வரலாற்ருராய்ச்சியில் புதியனவாகக் கிடைக்கும் ஆதாரங்களால் சில செய்திகள் மாறிப்போதல் இயல்பு என்பது அறிஞர் பலரும் அறிந்ததே. ஆனல், ஆராய்ச்சியாளர்கள் சமயச் சார்பும் காய்தல் உவத்தலுமின்றித் தக்க சான்றுகளைக்கொண்டு உண்மையையுணர்த்தும் உயர்ந்த குறிக்கோளுடன் தம் ஆராய்ச்சியை நிகழ்த்தி ஒரு முடிபிற்கு வருதல் வேண்டும். எல்லோரும் உண்மைச் செய்திகளை அறிந்துகொள்வதற்கு அத்தகைய ஆராய்ச்சிகளே மிக மிக இன்றியமையாதவையும் வரவேற்கத்தக்கவையும் ஆகும்.

நம் பொழிலில் வெளிவரும் 'தஞ்சை இரர்சராசேச்சுரக் கல்வெட்டு வரலாறு' அம்முறையில் அமையாமல் உண்மைக்கு மாருன பல செய்திகளைப் பரப்புவதாக உள்ளது. ஆதலால், அதனை ஈண்டு ஆராய்ந்து உண்மை காண்பது இன்றியலமையாததாயிற்று.

### 1. பாற்குளம் :

திருஞானசம்பந்த சுவாமிகளது க்ஷேத்திரக்கோவைத் திருப்பதிகத்தில் காணப்படும் 'குளமூன்றும்' என்ற தலங்கள், 'தளிக்குளம், கடிக்குளம், பாற்குளம் என்பன' எனத் தமிழ்ப் பொழில்

33-ஆம் துணர் 152-ஆம் பக்கத்தில் கட்டுரையாளர் விளக்கியுள்ளனர். அவற்றுள் பாற்குளத்தை ஒரு சிவத்தலமாகக் கருதி அவர் எழுதியுள்ளமை ஆராய்தற்குரியது. பாற்குளம் என்ற சிவத்தலம் ஒன்று பாடல்பெற்ற தலங்களிலாதல் வைப்புத்தலங்களிலாதல் காணப்படவில்லை. ஆனல், அது பழையாறை நகரிலுள்ள ஒரு தீர்த்தமேயாகும். அவ்வுண்மையை,

'பழையாறும் பாற்குளமுங் கைவிட்டிந்நாள் — பொடியேறு
மேனியராய்ப் பூதஞ்சூழப் புறம்பயம் நம்மூரென்று போயினரே'

என்று அப்பரடிகள் திரும்புறம்பயத் திருத்தாண்டகத்தில் கூறியுள்ளமையால் நன்கறியலாம். அப்பெருங்குளம் பழையாறை நகரின் ஒரு பகுதியாக முன்னரிருந்த பட்டீச்சுரத்திற்கு வடகிழக்கிலும் அரிச்சந்திரபுரத்திற்குக் கிழக்கிலும் இருத்தலை இன்றும் காணலாம். அது தீர்த்தச் சிறப்புவாய்ந்த குளமாயிருந்தமைபற்றிப் பழையாறை நகரோடு சேர்த்து அடிகள் கூறியுள்ளனர். ஆகவே, பாற்குளம் என்பது ஒரு சிவத்தலம் என்று கட்டுரையாளர் குறித்திருத்தல் பிழையாதல் காண்க.

## 2. குள மூன்று:

நம் தமிழ் நாட்டில் குளம் என்று முடியும் பெயர் அமைந்த ஊர்கள் பல உண்டு. அவற்றுள், பாடல்பெற்ற தலம் ஒன்றும் வைப்புத்தலங்கள் மூன்றும் உள்ளன. அவை, கடிக்குளம், வளைகுளம், தளிக்குளம், இடைக்குளம் என்பன. அவற்றுள் கடிக்குளம் என்பது தஞ்சாவூர் சில்லா திருத்துறைப்பூண்டித் தாலுகாவில் கற்பகனூர் கோயில் என்ற பெயருடன் இப்போது இருக்கின்றது. அது திருஞானசம்பந்த சுவாமிகளால் பாடப்பெற்று சிறப்பு வாய்ந்தது. எஞ்சியுள்ள மூன்றிற்கும் சமய குரவருடைய பதிகங்கள் காணப்படவில்லை. ஆனல், அப்பரடிகள் தம் அடைவு திருத்தாண்டகத்தில்,

'வளைகுளமுந் தளிக்குளமும் நல்லிடைக்குளமும்'

என அம்மூன்று தலங்களையும் குறித்துள்ளனர். எனவே, அவை வைப்புத்தலங்களாதல் வேண்டும்.

அவற்றுள், வளைகுளம் என்பது வட ஆர்க்காடு சில்லா அரக்கோணந் தாலுகாவில் வளர்புரம் என்ற பெயருடன் இந்நாளில் இருத்தல் அறியத்தக்கது. அவ்வூர்த் தொண்டீசுவரர் கோயிலிலுள்ள கல்வெட்டுக்கள்[1] அங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமானை 'வளை குளத்து நாகேசுவரமுடைய நாயனர்' என்று குறிப்பிடுவதால் இதனை நன்குணரலாம். அறுபத்து மூன்று அடியார்களுள் ஒருவரும் பரமேசுவரவர்மன்[2] என்ற பெயருடைய பல்லவ வேந்தரும்

1. Inscription Nos. 26 and 27 of 1911
2. இவ்வேந்தர்பெருமான், சுந்தரமூர்த்திகள் காலத்தவரான கழற்சிங்க நாயனரின் தந்தையாராகிய முதல் பரமேசுவரவர்மன் ஆவர்.

ஆகிய ஐயடிகள் காடவர்கோன் நாயனர் தாம் இயற்றியுள்ள க்ஷேத்திரத் திருவெண்பாவில்,

'இல்லும் பொருளும் இருந்த மனையளவே
சொல்லு மயலார் துடிப்பளவே — நல்ல
கிளைகுளத்து நீரளவே கிற்றியே நெஞ்சே
வளைகுளத்துள் ஈசனையே வாழ்த்து[3]'

என்று வளைகுளத்துப் பெருமானைப் புகழ்ந்து பாடியிருத்தல் காண்க.

தளிக்குளம் என்ற தலம் தஞ்சைத் தளிக்குளமேயாம். இதனை அப்பரடிகள் திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் 'தஞ்சைத் தளிக்குளத்தார்' என்று குறிப்பிட்டுள்ளமையால் அறிந்துகொள் ளலாம்.

இடைக்குளம் என்பது தஞ்சாவூர் ஜில்லா கும்பகோணம் தாலுகாவில் ஆடுதுறைப் புகைவண்டி நிலையத்திற்குத் தெற்கே அரசாங்க விவசாயப் பண்ணைக்கு அண்மையில் மருத்துவக்குடி என்ற பெயருடன் இக்காலத்தில் உள்ளது. அவ்வூர்க் கோயிற் கல்வெட்டுக்கள்,[4] 'உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுத் திருவிடைக் குளமுடையார்' என்று கூறுவதால் இச் செய்தியை உணரலாம்.

ஆகவே, குளம் என்று முடியும் இந்த நான்கு சிவத்தலங்களுள் திருஞானசம்பந்தர் கூறியுள்ள 'குளமூன்றும்' எவை என்பது புலப்படவில்லை. இந்நிலையில் கட்டுரையாளர், அவை தளிக்குளம், கடிக்குளம், பாற்குளம் என்பன என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும்? அன்றியும், ஒரு தீர்த்தக் குளத்தையும் சிவத்தல மாகக் கருதிக் குறித்துள்ளமை வியப்பிற்குரியது.

### 3. தஞ்சைத் தளிக்குளமும் இராசராசேச்சுரமும்:

தஞ்சையில் முதல் இராசராசசோழன் எடுப்பித்த கற்றளி, தஞ்சைத் தளிக்குளமுடையார் கோயில் அன்று எனவும், அது வேறொரு புதிய கோயிலேயாம் எனவும் கட்டுரையாளர் எழுதி யுள்ளமை ஆராயத்தக்கதொன்று.

சோழ மன்னர்கள் தம் ஆட்சிக்குட்பட்ட நாடுகளிலுள்ள சிவா லயங்களைக் கருங்கற் கோயில்களாக அமைத்து நாள் வழிபாட்டிற்கும் விழாக்களுக்கும் நிவந்தங்கள் வழங்கியிருத்தல் பலரும் அறிந்த தேயாம். அவர்கள் அங்ஙனம் செய்தமைக்குக் காரணம், சைவ சமய குரவர் மூவர் திருப்பதிகங்களிலும் பெரிதும் ஈடுபட்டு அத்திருப் பதிகங்களைப்பெற்ற திருக்கோயில்கள் என்றும் நின்று நிலவ வேண்டும் என்று கருதியமையேயாகும். கருங்கற்கள் எளிதிற் கிடைக்காத சோழ நாட்டில் எத்துணைப் பெரிய கருங்கற் கோயில்களை

3. பதினொராந் திருமுறை, க்ஷேத்திரத் திருவெண்பா—பா. 14.

4. Ins. 389 of 1907.

அப்பெரு வேந்தர்கள் அமைத்துள்ளனர் என்பது ஈண்டு நினைக்கத்தக்கது. அவர்கள் தம் அரண்மனைகளைக்கூடக் கருங் கற்களால் கட்டாமல் செங்கற்களால் அமைத்தமை அறியத்தக்கது. சிவபத்தி நிறைந்த பெரிய பாட்டியாராகிய செம்பியன்மாதேவியா ராலும் பேரன்புவாய்ந்த தமக்கையாராகிய குந்தவைப் பிராட்டியா ராலும் வளர்க்கப்பெற்று, ஒப்பற்ற சிவபத்திச் செல்வனாக விளங்கிய இராசராசசோழன் தன் தலைநகராகிய தஞ்சாவூரில் அப்பரடிகள் கூறியுள்ள தளிக்குளம் என்ற திருக்கோயில் ஒன்று இருக்கும்போது அதற்குத் திருப்பணி புரிந்து கற்றளியாக்காமல் புதியதோர் கோயிலை எடுப்பித்தான் என்று கூறுவது சிறிதும் பொருந்தாது.

பழைய செங்கற் கோயில்கள் கற்றளிகளாக அமைக்கப்படும் போது அவற்றை அமைப்பித்தோர் பெயர்களைப் பெறுவதும் உண்டு. கும்பகோணத்திற்கு வடமேற்கே ஐந்து மைலிலுள்ள திருப்புறம் பயத் திருக்கோயில் முதல் ஆதித்த சோழனால் கற்றளியாக அமைக் கப்பெற்றமைபற்றி ஆதித்தேச்சுரம் என்ற பெயர் எய்தியுள்ளது. திருமுனைப்பாடி நாட்டுத் தலங்களுள் ஒன்றும் சுந்தரமூர்த்திகள் அவதரித்தருளியதும் ஆகிய திருநாவலூரிலுள்ள திருத்தொண்டீச் சுரம் என்ற திருக்கோயில், முதற் பராந்தக சோழனுடைய புதல்வ னாகிய இராசாதித்தனால் கற்றளியாக்கப்பெற்றமையால் இராசாதித் தேச்சுரம் என்னும் பெயர் பெற்றுள்ளது. அவ்வுண்மைகளை அக் கோயில்களில் காணப்படும் கல்வெட்டுக்களால்[5] நன்கறியலாம். எனவே, கோயில்களுக்கு வழங்கிய பழைய பெயர்கள் மறைந்து சில காரணம்பற்றிப் புதிய பெயர்கள் அமைவதும் உண்டு என்பது தெள்ளிதிற் புலப்படுதல் காணலாம். ஆகவே, இராசராசசோழன் தன் தலைநகரில் முன்னரே நிலைபெற்றிருந்த தளிக்குளம் என்ற திருக்கோயிலையே காண்போர் கண்களைக் கவரும் மாபெருங் கற்றளி யாக அமைத்திருத்தல் வேண்டும் என்பது திண்ணம். கட்டுரை யாளர் கூறுவதுபோல் அது வெற்றிடமாகக் கிடந்த நிலத்தில் புதியதாக அமைக்கப்பெற்றதன்று.

தஞ்சை இராசராசேச்சுரத்திற்கு வடமேற்கேயுள்ள சிவகங்கைக் குளத்தினுள் ஒரு சிறு கோயில் உளது. அதனை லோகநாதேசு வரர் கோயில் எனவும் சிவலிங்கசுவாமி கோயில் எனவும் வழங்கு கின்றனர். எனவே, அது தளிக்குளமுடையார் கோயில் அன்று என்பதும் மிகப் பிற்காலத்தில் அமைக்கப்பெற்ற ஒரு சிறு கோயில் என்பதும் அறியத்தக்கனவாம்.

## 4. இராசராசேச்சுரமுடையாரும் தட்சிணமேருவிடங்கரும்.

கட்டுரையாளர் தஞ்சை இராசராசேச்சுரமுடையார் வேறு, ஆடவல்லார் தட்சிணமேருவிடங்கர் வேறு, எனவும் ஆடவல்லார்

5. South Indian Inscriptions, Vol. VI, No. 30
1 bid, Vol. VII, No. 977.

தட்சிணமேருவிடங்கர் என்பது நடராசப் பெருமானைக் குறிக்கும் பெயராகும் எனவும் எழுதியுள்ளார். அவற்றை ஆராய்வோம்.

இறைவன் அடியார்களுக்கு அருளும்பொருட்டுக் கோயிற் கருவறையில் (மூலத்தானத்தில்) சிவலிங்கத்திருமேனிகொண்டும், விழா நாட்களில் திருவீதிக்கு வந்து காட்சியளித்தற் பொருட்டு சோமாஸ்கந்தர் திருமேனிகொண்டும் எழுந்தருளியிருப்பதைச் சிவாலயங்கள் தோறும் காணலாம். அம்மையும் அப்பனும் நடுவில் முருகனும் உள்ள மூர்த்தியைச் சோமாஸ்கந்தர் என்று வழங்குவது மரபு. திருவாரூர், திருமறைக்காடு, திருவாய்மூர், திருக்காருமில், நாகைக் காரோணம், திருக்கோளிலி, திருநள்ளாறு என்ற சத்தவிடங்கத் தலங்களிலுள்ள தியாகராசப் பெருமானும் சோமாஸ்கந்தரேயாவர். திருவாரூரில் இருப்பதைப்போலவே, இராசராசசோழன் தஞ்சை இராசராசேச்சுரத்திலும் தியாகராசப் பெருமானை எழுந்தருளுவித்துத் தட்சிணமேருவிடங்கர் எனப் பெயரிட்டுள்ளான். எனவே, தட்சிணமேருவிடங்கர் சோமாஸ்கந்தரேயாவர். ஆகவே, சிவலிங்கத்திருமேனிகொண்ட இராசராசேச்சுரமுடையாரும் உற்சவ மூர்த்தியாகிய தட்சிணமேருவிடங்கரும் ஒருவரேயாவர் என்பதும் வேருகார் என்பதும் உணரற்பாலவாம்.

கட்டுரையாளர், சோமாஸ்கந்தர் திருவுருவத்தையுடைய தட்சிணமேருவிடங்கரை நடராசப்பெருமான் என்று எழுதியிருப்பது உண்மைக்கு மாருனதோர் விபரீத முடிவாக இருக்கிறது. இஃது, ஆராய்ச்சியாளர் அண்மையிலுள்ள தஞ்சைக்குச் சென்று தட்சிண மேருவிடங்கரை நேரில் பார்த்துத் தெரிந்துகொள்ளாமையால் நேர்ந்த பிழையே எனலாம். திருவாரூர்த் தியாகராசப்பெருமானுக்கு 'இருந்தாடழகர்' 'அசைந்தாடும் பெருமான்' என்ற சிறப்புப் பெயர்கள் உண்டு என்பதைத் திருவாரூர்க் கோவையால் நன்குணரலாம். அப்பெருமானைப் போலவே தஞ்சையிலுள்ள தட்சிண மேருவிடங்கரும் இருத்தல்பற்றி ஆடவல்லார் தட்சிணமேருவிடங்கர் என்று கல்வெட்டுக்களில் சிற்சில இடங்களில் குறிக்கப்பெற்றுள்ளனர். அதனுல், அம்மூர்த்தி நடராசப்பெருமான் ஆகார் என்பது அறியத்தக்கது.

இராசராசசோழன் மனைவியார் சோழமாதேவியார், நடராசப் பெருமானை உமாபரமேசுவரியாருடன் தனியே எழுந்தருளுவித்து அணிகலன்கள் அளித்த செய்தி இராசராசேச்சுரத்திலுள்ள ஒரு கல்வெட்டில்[6] காணப்படுகிறது. இராசராசசோழன் எழுந்தருளுவித்த தட்சிணமேருவிடங்கர் நடராச மூர்த்தியாயிருப்பின், சோழமாதேவியார் வேறொரு நடராச மூர்த்தியை அத்திருக்கோயிலில் எழுந்தருளுவித்திருக்கமாட்டார் என்பது திண்ணம். எனவே, தட்சிணமேருவிடங்கர் சோமாஸ்கந்தரேயன்றி நடராசமூர்த்தியல்லர் என்பதை அறிதல் வேண்டும். (தொடரும்)

---

6. S. I. I., Vol. II, No. 42.

# முன்னோர் கடவுள் வழிபாடு.

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே)

சாமி. சிதம்பரனார்.

பண்டைத் தமிழ் மக்கள் தங்கள் பழக்க வழக்கங்களை ஒட்டியே, தாங்கள் நம்பிய கடவுளர்களையும் வழிபட்டு வந்தனர். தமிழகத்தில் மட்டும் அன்று; எந்நாட்டிலும் இப்படித்தான். இன்றும் நாம் சுவைக்கும் நல்ல பண்டங்களை நமது குழந்தைகளுக்குக் கொடுக்கின்றோம்; நமது பெற்றோர்களுக்குக் கொடுக்கின்றோம்; நமது நண்பர்களுக்கும் கொடுக்கின்றோம். இது இயற்கை. இந்த இயற்கை வழியிலேயே கடவுளர் வழிபாடும் நடைபெற்று வந்தது.

பெரியபுராணத்தில் உள்ள கண்ணப்ப நாயனார் வரலாறு ஒன்றே இதற்குப் போதுமான சான்றாகும். திண்ணன் என்ற கண்ணப்பர் வேடர் மரபில் வந்தவர்; வேட்டையில் கிடைத்த நல்ல ஊன்களை உண்டு மகிழ்வதே அவர்கள் வாழ்க்கை. அக் கண்ணப்பர் காளத்தியில் உள்ள சிவலிங்கத்தைக் கண்டவுடன் அன்பு கொண்டார்; தாம் சுவைத்துப் பார்த்த ஊனையே சிவலிங்கத்துக்குப் படைத்தார். சிவபெருமானும் அதை ஏற்றார். இவ்வாறு பெரிய புராணம் கூறுகிறது. இது மக்கள் தங்கள் பழக்க வழக்கங்களை ஒட்டியே தெய்வங்களைப் போற்றுவார்கள் என்பதையே காட்டுகின்றது.

பண்டைத் தமிழர்கள் புலாலையும் மதுவையும் வெறுத்தவர்கள் அல்லர். சங்கநூல்களிலே புலால் உணவும், கட்குடியும் கண்டிக்கப் படவில்லை. சிறந்த வள்ளல்கள், பெரிய புலவர்கள்—குறிப்பாகக் கபிலர், ஔவையார் போன்ற புலவர்கள் எல்லாம், இவற்றை விலக்கவில்லை. இவர்கள் எல்லோரும் புலால் உணவையும், மதுவையும் மகிழ்ந்து உண்டதையும், பாராட்டியதையும் புறநானூற்றிலே காணலாம். பத்துப்பாட்டிலே புலால் உணவும் மதுவும் பாராட்டப் பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

புலால் உண்ணாதவர்களும் சங்ககாலத்திலே இருந்தனர் என்பதைப் பத்துப்பாட்டிலே காணலாம். ஆனால் அவர்கள் சிறுபான்மையினர். பெரும்பாலான தமிழர்கள்—பழந்தமிழர்கள்—மதுவும் மாமிசமும் உண்டு மகிழ்ந்து வாழ்ந்தவர்கள் என்பதில் ஐயம் இல்லை.

இத்தகைய தமிழ்மக்கள் தங்கள் கடவுளர்களை எம்முறையில் வணங்கியிருக்க முடியும்? தங்கள் பழக்க வழக்கங்களைப் பின்பற்றித் தான் வணங்கியிருப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை. ஆடு, கோழிகளைப் பலியிட்டு வணங்கினார்கள்; மது மாமிசங்களைப் படைத்து வழிபாடு செய்தார்கள். இந்த உண்மையைச் சங்க இலக்கியங்களிலே நாம் காணுகின்றோம்.

### பலியிட்டு வணங்குதல்

மகள் காதல் நோயால் வருந்தியிருக்கின்றாள். அதைக்கண்ட தாய் உண்மையை உணரவில்லை. ஏதோ தெய்வக்கோளாறினால்

தான் மகளுக்கு நோய் வந்தது என்று நினைத்தாள். ஆதலால் தெய்வங்களுக்குப் பூசைபோட்டு மகளின் பிணியைத் தணிக்கும்படி வேண்டிக்கொள்வதென்று முடிவு செய்தாள். இதை அறிந்த தோழிப்பெண் இச்செய்தியைத் தன் தலைவியிடம் அறிவிக்கின்றாள். குறுந்தொகையின் 263-வது செய்யுளில் இப்பொருள் அமைந்திருக்கின்றது.

"தோழியே! நீரோடும் ஆற்றின் நடுத்திட்டிலே, அன்னை வெறியாட்டு எடுக்கக் கருதியிருக்கின்றாள். உன்னுடைய காதல் நோயை எந்த வகையிலும் தணிக்க முடியாத வேறு பல தெய்வங்களைப் போற்ற நினைத்தாள். ஆட்டுக்குட்டியை அறுத்து, தினையால் செய்த பலியைப் படைத்து, பலவகையான வாத்தியங்களும் முழங்கும்படி பூசை போடும்போது, அத்தெய்வங்கள் பூசாரிகளின் மேல் தோன்றுமே தவிர, உன் காதல் நோய்க்கு மருந்தாகாது. இத்தகைய தெய்வங்களை வாழ்த்தி, "என் மகளாகிய இவள் பேயால் பீடிக்கப்பட்டாள்" என்று உன் அன்னை தெய்வத்தின்மேல் பழி சுமத்துதல் வருந்தத் தக்கது.

மறிக்குரல் அறுத்துத் தினைப்பிரப்பு இரீஇச்
செல்ஆற்றுக் கவலைப் பல்இயம் கறங்கத்
தோற்றம் அல்லது, நோய்க்கு மருந்து ஆகா
வேற்றுப் பெருந்தெய்வம் பலவுடன் வாழ்த்திப்
பேஎய்க் கொளீஇயள் இவள் எனப்படுதல்
நோதக் கன்றே தோழி.

இதுவே அந்தக் குறுந்தொகைச் செய்யுள். பழந்தமிழ் மக்கள், பல தெய்வங்களுக்கும் உயிர்ப்பலியிட்டு வழிபாடாற்றினர் என்ற உண்மையை இப்பாடல் காட்டுகின்றது.

புறநானூற்றிலேயும், கடவுளர்க்குப் புலால் உணவுதான்—புலால் வைத்துப் பூசை செய்வதுதான்—விருப்பமானது என்ற கருத்து காணப்படுகின்றது.

வாடாப் பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவி னோரும் (புறம் 62)

"வாடாத கற்பகத்தின் தாரினையும், இமையாத கண்ணினையும் நாற்றமாகிய உணவையும் உடைய தேவர்களும்".

நாற்றம் என்பது சங்ககாலத்தில் நறுமணத்தைக் குறித்தது. சமைத்த புலால் உணவின் வாசனையை நறுமணம் என்றே இன்றும் முகர்வோர் உண்டு.

இப்புறநானூற்றுக் குறிப்பு தமிழர்கள் தெய்வங்களுக்குப் புலால் படைத்து வாழ்த்தினர் என்பதைக் காட்டும்.

பத்துப்பாட்டில் மதுரைக்காஞ்சியில் "சிவபெருமானை உள்ளிட்ட எல்லாத் தெய்வங்களும், புலால் உணவையே விரும்பும் தெய்வங்களாக இருந்தன" என்ற குறிப்புக் காணப்படுகின்றது.

நீரும் நிலனும் தீயும் வளியும்
மாகம் விசும்போடு ஐந்துடன் இயற்றிய
மழுவாள் நெடியோன் தலைவனாக
மாசுஅற விளங்கிய யாக்கையர் சூழ்சுடர்
வாடாப்பூவின் இமையா நாட்டத்து
நாற்ற உணவின் உருகெழு பெரியோர்

"நீர், நிலம், தீ, காற்று, திக்குகளையுடைய ஆகாயத்துடன் இந்த ஐந்தையும் ஒன்றாகப் படைத்தவன்; மழுவாகிய வாளாயுதத்தையுடையவன்; பெரியோன்; ஆகிய சிவபெருமானை முதல்வனாகக் கொண்டவர்கள்; குற்றமற்ற விளங்கும் உருவத்தையுடையவர்கள்; ஒளிபொருந்திய வாடாத மலர் மாலையை அணிந்தவர்கள்; இமையாத கண்களை உடையவர்கள்; நாற்றம் கமழும் புலால் உணவை விரும்புகின்றவர்கள்; அச்சம் நிறைந்த பெரிய தெய்வங்கள்."

(மதுரைக் காஞ்சி 453—458)

இந்தப் பத்துப்பாட்டுக் குறிப்பும், பண்டைத் தெய்வங்கள் புலாலையே விரும்பின; மக்களும் அவ்வுணவையே அவைகளுக்குப் படைத்தனர்; என்ற உண்மையை உணர்த்திற்று.

தேவர்களுக்காக வேள்விகள் நடத்தப்பட்டன. வேள்வியிலே பலியிடப்படும் பிராணியின் ஊன் தேவர்கள் விரும்பும் உணவு. இதையே அவிப்பலி என்பர். இத்தகைய வேள்வி பாரத நாட்டினர் அனைவராலும் பண்டைக்காலத்தில் போற்றப்பட்டு வந்தது. பாரத நாட்டு மக்கள் பெரும்பாலும் பண்டைக்காலத்தில் புலால் உணவினராயிருந்தனர். ஆதலால் உயிர்ப்பலியிடும் வேள்விகளைச் செய்தனர்; அவைகளின் வாயிலாகக் கடவுளரை வழிபட்டனர். இவ்வுண்மையையே இது காட்டும். தமிழ்மக்களும் இதற்கு விலக்கல்லர்.

தமிழ்மக்கள் பண்டைக்காலத்தில் தங்கள் பழக்க வழக்கங்களை ஒட்டியே கடவுளரை வணங்கினர்; பொதுவாகப் பாரதநாட்டு மக்கள் அனைவரும் இம்முறையில்தான் வணங்கினர்; இவ்வுண்மைகளை மேலே கூறியவற்றைக்கொண்டு அறியலாம். இனி, குறிப்பிட்ட சில தெய்வங்கள் தமிழர்களால் எம்முறையில் வணங்கப்பட்டன என்பதையும் காண்போம்.

சங்க நூல்களிலே முருகனுக்கு வழிபாடாற்றிய முறைதான் விரிவாகக் கூறப்படுகின்றது. உயிர்ப்பலியில்லாமல் முருக வழிபாடு நடந்ததில்லையென்றே சொல்லி விடலாம்.

## முருகன் வழிபாடு

தலைவி காதலால் வருந்துகின்றாள். அதை, அவள் அன்னை அறியவில்லை. முருகனால்தான் அவளுக்குப் பிணி நேர்ந்தது என்று கருதினாள். முருகனுக்கு விழாவெடுத்தாள். அப்பொழுது பூசாரி மீது முருகன் ஆவேசம் வந்தது. அவன் ஆடுகின்றான். அவனைப் பார்த்துத் தோழி கேட்பதாக ஒரு செய்யுள் குறுந்தொகையில்

காணப்படுகின்றது. இது குறுந்தொகையின் 362-ஆம் பாட்டு. இச்செய்யுள், தமிழ்மக்கள் முருகனை எவ்வாறு வழிபட்டனர் என்பதைக் காட்டும்.

"முருகனை வழிபட்டு வந்த அறிவுள்ள வேலனே! கோபித்துக் கொள்ளவேண்டாம். உன்னை ஒன்று கேட்கின்றேன். பலவேறு பட்ட நிறமுள்ள சில சோற்றையுடைய பலியை வைத்துப்படைத்து, சிறிய ஆட்டுக்குட்டியைக் கொன்று இத்தலைவியின் நல்ல நெற்றியையும் தடவி, முருகக்கடவுளை வணங்கி பலியாகக் கொடுக்கின்றாய். இப்படிக் கொடுக்கும் பலியை, இவளை வருந்தச்செய்த, மலைநாட்டுத் தலைவனுடைய மார்பும் உண்ணுமோ?

முருகு அயர்ந்து வந்த முதுவாய் வேல!
சினவல் ஓம்புமதி! வினவுவது உடையேன்!
பல்வேறு உருவில் சில்அவிழ் மடையொடு
சிறுமறி கொன்றுஇவள் நறுநுதல் நீவி
வணங்கினை கொடுத்தி ஆயின், அணங்கிய
விண்தோய் மாமலைச் சிலம்பன்
ஒண்தார் அகலமும் உண்ணுமோ பலியே"

இது முருகனுக்கு ஆடு பலியிடும் வழக்கம் உண்டென்பதைக் குறித்தது.

"வெறிஎன உணர்ந்த உள்ளமொடு மறிஅறுத்து
அன்னை அயரும் முருகு"

"வெறியெடுத்தால் உன் நோய் தீரும் என்று எண்ணி, ஆட்டை அறுத்து, உன் அன்னையால் வணங்கப்படும் முருகன்" என்பது நற்றிணைப்பாட்டு 47.

களம் நன்குஇழைத்துக், கண்ணி சூட்டி
வளநகர் சிலம்பப் பாடிப்பலி கொடுத்து
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
முருகாற்றுப் படுத்த உருகெழு நடுநாள்

"முருகனுக்குப் பூசைபோடும் இடத்தை நன்றாகத் தூய்மை செய்தான். முருகன் கருவியாகிய வேலுக்கு மலர்மாலை சூட்டினான். சிறந்த நகரில் ஆரவாரம் உண்டாகும்படி முருகனைப் புகழ்ந்து பாடினான். ஆட்டைப் பலி கொடுத்தான். நல்ல தினையுடன் இரத்தத்தையும் கலந்து தூவி முருகனை வழிபடச் செய்தான். இத்தகைய அச்சந் தரும் நள்ளிரவு" —என்பது அகநானூற்றுப்பாடல் 22.

"சிறுதினை மலரொடு விரைஇ மறிஅறுத்து
வாரணக் கொடியொடு வயின்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்"

"சிறிய தினையரிசியை பூக்களோடே கலந்து பிரப்பரிசியாக வைப்பர்; ஆட்டை அறுப்பர்; கோழிக்கொடியோடு அவ்விடத்தில் முருகனை நிலைநாட்டுவர். இவ்வாறு ஊர்தொறும் நம் முருகனுக்கு விழாச் செய்வர்".

"மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள்ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇ

மிகுந்த வலிமை பொருந்திய பெரிய கால்களையுடைய கொழுத்த ஆட்டுக்கிடாயின் இரத்தத்துடன் கலந்து பிசைந்த தூய வெண்மை யான அரிசியை சிலபலியாகச் செய்து பல பிரப்பங்கூடைகளிலே வைத்து" முருகனை வணங்குவார்கள்.

இவ்விரண்டு குறிப்புக்களும் பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப் படையில் காணப்படுவன.

மேலே காட்டிய குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, பத்துப் பாட்டு முதலியவைகளின் பாடல்களால், முருகன் தமிழ் மக்களால் உயிர்ப்பலியிட்டு வணங்கப்பட்ட தெய்வம் என்பதை அறியலாம்.

துர்க்கை, ஐயை, காளி என்னும் பெண் தெய்வத்திற்கும் பலி கொடுத்தே வழிபாடு செய்தனர் தமிழர்.

"விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்
கடனும் பூணும்: கைந்நூல் யாவாம்"

"பிளப்பும், குகையும் உள்ள மலைப்பக்கத்தில் உள்ள வெற்றி பொருந்திய துர்க்கைக்குப் பலியிட்டுப் பூசை செய்யும் கடமையைச் செய்யாது விட்டோம்; கையில் காப்பு நூலைக்கட்டாமலும் விட்டோம்".

இந்தக் குறுந்தொகைப் பாட்டுத் தமிழர்கள் துர்க்கைக்குப் பூசை செய்ததைக் காட்டுகிறது. துர்க்கைக்கு உயிர்ப்பலியிட்டுப் பூசை போடும் வழக்கம் இருந்ததை விளக்குகிறது. விழாத் தொடங்கும்போது, மஞ்சள் நூலைப் பூசாரி தன் கையில் கட்டிக் கொள்வதற்குக் காப்புக்கட்டிக் கொள்வது என்பார்கள். விழாவின் முடிவிலேதான் காப்புக் களைவார்கள். இவ்வழக்கம் இன்றும் கிராம தேவதைகளுக்கு நடத்தும் திருவிழாக்களில் உண்டு.

ஐயை, காளி, துர்க்கைத் திருவிழா எவ்வாறு நடைபெற்றது என்பதைச் சிலப்பதிகாரத்திலே காணலாம். சிலப்பதிகாரம், மதுரைக்காண்டம், வேட்டுவவரியிலே இவ்விழா விரிவாகக் காணப் படுகின்றது.

பண்டைக் காலத்தில் தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிட்டு வணங்கும் வழக்கமே மிகுதியாக இருந்தது. ஆயினும், அறிஞர்கள் அதை நாகரிகமுள்ள வழிபாடாகக் கொள்ளவில்லை. ஆயிரக்கணக் கான ஆண்டுகளுக்கு முன்பே உயிர்ப்பலியிடும் வழக்கத்தைக் கண்டிக்கத் தொடங்கிவிட்டனர். தெய்வ வணக்க முறையிலே தமிழ் மக்களிலே ஒரு பகுதியினர் நாகரிகம் பெற்று முன்னேறி வந்தனர்.

தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடுவது தவறு என்ற கொள்கை, சைன, பௌத்த மதங்களின் செல்வாக்குப் பாரதநாட்டில் பரவிய பிறகுதான் ஏற்பட்டிருக்க வேண்டும். தமிழகத்திலும் அம்மதங்கள் பரவியபின்னர்தான் உயிர்ப்பலியிடும் வழக்கம் குறைந்தது. சிவ

## கம்பராமாயணம்.

**பாலகாண்ட முதற்பகுதி :** அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு.

இதன் முன்னர் வந்த சுந்தர காண்டப் பகுதிகள் போலவே பால காண்ட முதற் பகுதியும் வெளி வந்துளது. அழகான பதிப்பு.

### ஆயத்தக்க பாட வேறுபாடு.

சிறப்புப்பாயிரத்துள் அனுமன் துதியாக வந்துள்ள "அஞ்சிலே யொன்று பெற்றான்"—என்ற பாட்டில் "ஆரியற்காகவேகி" என்ற பாடமே சிறந்ததாகக் கொண்டு பலர் பதிப்பித்துள்ளார். நல்ல சுவடிகள் பலவற்றுள்ளும் காணப்படுவதும் இதுவே. இப்பதிப்பில் "ஆருயிர் காக்கவேகி" என்று பதிப்பித்துப், "பெறற்கரிய பிராட்டியின் உயிரைக் காக்கும் பொருட்டு" என்ற பொழிப்புரையும் தரப்பட்டுளது. ஆனால் சிந்திக்கவேண்டுவதொன்றுண்டு. இராகவன் இட்ட பணியைத் தலையாகக்கொண்டு செய்வதும், அவனுக்குத் துணை புரிவதுமே தனக்குத் தலையாய அறம் எனக்கொண்டனன் அனுமன். அவற்றிற்கே இங்கு முதன்மை. பிராட்டியின் உயிர் காக்கப்படுவது அடுத்தபடிதான். பதிப்பாளர் கொண்ட பாடத்துக்கு இராமசெயத் திருப்புகழினின்றும் காரணம் காட்டுவது பொருந்துமா என்பதனை ஆயவேண்டும். திருப்புகழாசிரியர் கருத்தென்று கொள்ள வேண்டுமேயொழிய, இவர் கருத்திற்காகப் பாடம் அப் படித்தான் இருக்கவேண்டுமென்பதின்று. நிற்க.

---

[!70-ம் பக்கத் தொடர்ச்சி]

பெருமான், திருமால், முருகன் போன்ற தெய்வங்களை, மலர் கொண்டு பூசிக்கும் வழக்கம் ஏற்பட்டது. காய்கனிகள், தானியங்களால் செய்த பண்டங்கள், இவைகளைப் படைத்துப்பூசிக்கும் வழக்கம் ஏற்பட்டது. நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்தில் இவ்வழக்கம் தமிழகத்தில் மிகுதியாகப் பரவியது.

ஆயினும், புலால் உணவை வெறுத்தவர்களே, தாங்கள் வழிபடும் தெய்வங்களை சைவத்தெய்வங்களாக—மாமிசப் படையலை வேண்டாத தெய்வங்களாக வைத்து வழிபாடு செய்து வந்தனர்.

மாமிசம் உண்ணும் மக்கள் தாங்கள் வணங்கும் தெய்வங்களை தங்கள் வழக்கப்படியேதான் உயிர்ப்பலியும் மாமிசப் படையலும் வைத்து வணங்கி வந்தனர். சில ஆண்டுகளுக்குமுன் ஏற்பட்ட உயிர்ப்பலித் தடைச்சட்டந்தான் தெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடுவதை ஒரளவு தடுத்தது என்று கூறலாம்.

மேலே கூறியவைகளைக் கொண்டு, பண்டைத் தமிழர்களின் தெய்வ வணக்க முறை அவ்வளவு நாகரிகம் பெற்றமுறையில் இல்லை என்பதைக் காணலாம். வரவர மக்கள் நாகரிகத்தில் முன்னேறி வருவதுதான் இயற்கையாகும். இந்த உண்மையை ஒட்டியே, நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலத்திலிருந்து தமிழ்மக்கள் கடவுள் வணக்க—வழிபாட்டு முறையிலே மிகவும் நாகரிகம் பெற்று வளர்ந்து வந்திருக்கின்றனர். இந்த வளர்ச்சி இயற்கையான வளர்ச்சியாகும்.

அகலிகைப் படலத்துள்—"வஞ்சிபோல் இடையாள் பண்டை வண்ணத்தளாகி நின்ருள்"— என்றேயுள்ளது முற்பதிப்புகளில். இதில் "முன்னை வண்ணத்தள்"— என்று காணப்பெறுகிறது. பொருள் வேறுபாடு இல்லையெனினும் பழமை குறிப்பதாய பண்டை என்ற சொல்லை விலக்க வேண்டுவதின்று.

## ஆயவேண்டிய குறிப்புரை.

நாட்டுப் படலத்து முதற் செய்யுள், வான்மீகியின் கவியாற்றலையும், கோசல நாட்டையும் சிறப்பிக்க எழுந்தது, 'வாங்கரும பாதம் நான்கும் வகுத்த வான்மீகி என்பான், தீங்கவி செவிகளாரத் தேவரும் பருகச் செய்தான்"—என்பது. இதனுள் "வாங்கரும் பாதம் நான்கும்"—என்பதற்கு "எடுத்துவிட்டு வேறு அடிகளை அமைக்க இயலாத நான்கு அடிகளையும்"—என்பது; அஃதாவது—இடைச் செருகலாக யாரும் தம் கருத்துக்கேற்ப செய்யுளின் அடியையோ செய்யுளையோ மாற்ற இயலாத வகையில் அமைந்த செய்யுட்கள் என்பது; இதுவே பண்டையோர் கொண்ட பொருள். வடமொழிவாணரும் "இக்கருத்தமைந்த பகுதி இங்குமுண்டு" என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். (இதனை வெள்ளிப்பாட்டென்றும், கந்தியார் கூற்றென்றும் நம்மவர் வழங்குவர்.) இதற்குக் "கோடாத நான்கு அடிகளால் முதலிற் சுலோகங்கள் இயற்றிய வான்மீகி என்று சிறப்பித்துச் சொல்லப்ப்டுகின்ற முனிவர் பெருமான்" என்ற பொழிப்புரை காணப்பெறுகிறது. இதன் திறம் ஆய்க.

## சிறப்பு.

இப்பதிப்பின் பாயிரத்துள் சில புதுப் பாடல்கள் காணப்பெறுகின்றன. அவைகள் பல சுவடிகளை ஆய்ந்ததால் நேர்ந்தவை.

"பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து"—இச்செய்யுட்கு சிறப்புரையும், ஒத்த பகுதியைப் பெருங் கதையினின்றும் எடுத்துக் காட்டி விளக்கியமையும் போற்றத்தக்கன. அங்கோர் இலக்கணக் குறிப்பெழுதியமையும் குறிப்புரையாசிரியர்க்குள்ள பொருளிலக்கணப் பெருக்கைக் காட்டுகிறது

நகரப் படலத்து முதற் செய்யுளோடு அப்படலத்திறுதிச் செய்யுளை இயைத்துக் காட்டி எழுதிய விளக்கம் விளக்கமாகின்று.

மிதிலைக் காட்சியில், "பொன்னின் சோதி"—என்று தொடங்கும் பாட்டு முன்பின் சில பாட்டுக்களையேனும் கொண்டிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அது பொருட் பொருத்தமுடையதாகின்றது. இன்றெனின் பொருள் அவ்வளவு பொருத்தமாக இல்லை என்பது சில அறிஞர்கள் எண்ணம். ஆனல் இக்குறிப்புரையாசிரியர் தனிப் பாட்டையே முடித்துக காட்டிவிட்டார்.

மேற்கூறியாங்குச் சில, கருத்துக்கு இயையாதனவெனினும், நல்லன பலவுண்டு. அவை கண்டு மகிழ்வாம்.

**வித்துவான் மு. சடகோபராமானுசம் பிள்ளை.**

# இசைத் தமிழ்ப் பண்கள் விளக்கம்.

சங்கீதம் ப. சுந்தரேசன், குடந்தை.

(பதிப்புரிமை கட்டுரை ஆசிரியருக்கே உரியது)

விளக்கம்-ம

அத்தகு சிறப்பும் தொன்மையுமுடைய தென்னாட்டின் பண்டைய இசைத்தமிழ், அக்காலம் முதல் இக்காலம் வரை கருவிகள் ஊதுவோராலும் இசைப்போராலும் ஒருவகை வழக்குப் பற்றியே இருந்து வந்தபோதிலும், ஊதுகின்றவர்கள், இசைப்பவர்கள், பாடுபவர்கள் என்ற மூவகைத் தொழில் வல்லாரின் திறமையைப் பொருத்தே அதன் சிறப்பு முறை நாளடைவில் மேன்மையாகவோ, தாழ்மையாகவோ உணர்ந்தறியக் கிடந்தது. திறமையென்பது அவரவர்களின் உடல்நிலை, அறிவு, இவற்றைக் கொண்டே அறியப்படுவதாகும்.

தமிழ்நாட்டில் விளங்கும் கருவிகளின் ஒலிப்பண்பாடு இக்காலத்தும் நன்கு அழியாது மற்றையநாட்டின் அமைப்பு முறைகள் எல்லாவற்றிலும் தனித்து தனக்கெனவே கொண்டதொரு சீர்மையோடு விளங்கி வருவது, நாட்டில் ஆங்காங்கு சுற்றியலைந்து பாமரமக்களின் வழக்கு முறைகளை ஊன்றிக் காண்பார்க்கு எளிதில் விளங்கும். நாகரிகமாக ஊதுபவர்களோ ஏனையோரோ சிலர்மட்டும் தற்காலச்சூழ்நிலைகளில் வேற்றுநாட்டு இசைமுறைகளை வானொலிவாயிலாகக்கேட்டுத் தங்கள் கருவிகளில் சிற்சில பிடிமுறைகளைச் சேர்த்துவிடுவதால் தொன்மை கெட்டுவிடுகின்றது. இத்தகு சூழ்நிலைபோன்ற ஏதோ ஒரு சூழ்நிலை தான், அதாவது வேற்றவர்களாலும் வேற்றவர்களின் கூட்டுறவுகளாலும் பண்டைய தமிழ்நாட்டு இசைப்பண்பு வரவர மாறுபாடடைந்ததற்கு இயற்கை காரணம் ஆயிற்று எனலாம். இவை யாவும் ஊன்றிக்காண உண்மை விளங்காமலிராது.

கி. பி. பதின்மூன்றும் நூற்றாண்டிற்குப்பின்னர், அரசியல் வேறுபாடுகளினாலும், விசயநகர ஆட்சியின் காலத்தினராகிய இசைப்புலவர்களிற் பெரும்பாலோர் தமிழ்நாட்டிற் குடிபுகுந்து சிறப்பாகத் தஞ்சைமாவட்டத்திலேயே பெருக வாழ்ந்து வந்தமையாலும், இவர்களால் கைக்கொள்ளப்பெற்ற இசைமுறையே பிற்காலத்தில் பயிலப்பெற்று அக்குழுவினரின் இசை பாடும் முறை ஒருவகையாகி இற்றைய கர்நாடக சங்கீத பாணி ஆயிற்று. திருக்கோயில்களில் வழங்கிவந்த தொன்மை இசைமுறை, பெருப்பாலும் உரிமைப்போராட்டத்தோடு கோயில்களோடேயே நின்று, பரம்பரையின் பெருமைபேசிப் பயிற்சிக் குறைவாலும் புறக்கணிப்பாலும் தம் தொழில் முறையைத் தாங்களே குறைவாக எண்ணி வந்தமையாலும், ஒருவகையில் அந்தந்தக் கோயில்களையும் சிற்றூர்களையும் விட்டு வெளியேறி, பெருவாரியான மக்கள்

நிறைந்து வாழும் பெருநகரங்களில் சிறிது தலைகாட்டுவதும், காட்டாததுமாய் ஓரளவு நின்று வருவதாயிற்று.

விளக்கம்–மிக

மிகப்பழங்கால இசைத்தமிழின் தோற்றுவாய் முறையில், முதலிசை தாரம் எனப்படும். இசைத்தமிழ் வல்லார் யாவருமே தாரம் முதலாகவே கணிதமுறைகளை வகுத்து நிறுவினர். பின்னர் எத்துணையோ முறையில் பெருக வளர்ந்து விளங்கிய போழ்தினும், முற்றோன்றிய இசை (முதலிசை) தாரமென்பதே யாவராலும் உணரப்படுவதாயிற்று. இதுவே பழந்தமிழிசை நூற்றுணிபாகும்.

## தாரத்தின் பெற்றிமையை வலியுறுத்தும் ஆன்றோர்களின் சில சொற்கள் வருமாறு.

இசைத்தமிழிற்கே முதலிசையாகிய தார இசையை :—

"பொறப்புடைத் தளராத் தாரம்"

—என்றார் இளங்கோவடிகள்.

"தாரம் உய்த்தது பாணர்க் கருளோடே"

—என்றார் திருஞானசம்பந்தர்.

"ஏறிய தாரம்" எனச்சிறப்பித்தார் நம் தெய்வச் சேக்கிழார். அடியார்க்கு நல்லாரோவெனில் "முற்றோன்றியது தாரம்" எனவும் கூறி உரிய இடத்தில் "அது வந்தவழிக் கண்டுகொள்க" எனவும் கூறினர்.

குழலிசை வழியே முதற்பண்ணினைப் பழந்தமிழ் மக்கள் முதன்முதலாக உணர்ந்தமையினாலே அத்தகு குழலும் பரிபாடலிற் கூறியாங்கு முதலில் ஐந்து துளைகளுடன் விளங்கினமையினாலே, அவ்வைந்திசைகளும், இசைக்கலையமைப்புமுறையும் ஒலிபிறக்குமுறையும் ஒத்தநீர்மையவாய் முறை பிறழாத வைப்பு முறையாம் அருட்டிரு. விபுலாநந்தர் கூறியவகையில்,

தாரம் — குரல் — துத்தம் — உழை — இளி

என்றமைந்து நின்றன. இதன் ஒலிமுறை யுணர்த்தும் அலகு நிலைகளும் இயற்கையமைதியும் முற்றோற்றமும் வழுவாது உள்ளது உள்ளவாறே அறிந்துணர,

| தாரம் — | குரல் — | துத்தம் — | உழை — | இளி |
|---|---|---|---|---|
| ௦ | ச | ச | ரு | ச |

எனவே நின்றன. இவ்வலகுகளைத் தற்கால முறையிற் கூற வேண்டுமாயின், அதாவது தற்காலம் நம் தென்னிந்திய இசை முறையில் எந்தச்சுருதியை ஆதார சுருதியாக வைத்துக்கொண்ட போழ்தினும் வைத்துக்கொண்ட ஆதாரசுருதியை ஷட்ஜம் எனக்கூறும் வழக்கு உள்ளமையினாலே, நாமும் அவ்வாறு கூற,

தாரம்=ஷட்ஜம் எனவும், குரல், சதுச்ருதிருஷபம் எனவும், துத்தம், அந்தரகாந்தாரமெனவும், உழை, பஞ்சமமெனவும் இளி, சதுச்ருதிதைவதமெனவும் கூற நேரிடுகின்றன.

விளக்கம்-௰௨

தாரம் எனும் முதலிசைக்கே உரிய குறியீட்டெழுத்து க எனும் முதல் உயிர்மெய்யெழுத்தாகும். இதன் நெடில் கா ஆதலால் 'கா' எனும் குறியீட்டெழுத்தினைப்பெற்ற தாரம் கா+தாரம் காத்தாரம், காந்தாரம் எனவெல்லாம் கூறப்படுவதாயிற்று. காந்தாரம் என்ற பண் பண்டைய இசைத்தமிழில் இருந்து வந்ததற்குச் சான்று கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் எழுந்த திருப்பதியங்களில் இன்றளவும் பெயராளவில் நன்கு காணக்கூடியதாகின்றது. முதலிசையாகிய தாரந்தான் தனக்குரிய குறியீட்டெழுத்துடன் சேர்ந்து காந்தாரமானதால் முதற் பண்ணாகிய முதல் ஐந்திசைகொண்ட தாரப்பண், காந்தாரப்பண் ஆயிற்று எனக்கூறுவதில் வியப்பொன்றுமில்லை.

காந்தாரப்பண்ணிற்கு இன்னும்படுவதோர் பண்டையஇசைத் தமிழ்ப்பெயர் **ஆசான்திறம்** என்பதாகும். இதனை, சிலப்பதிகாரம் புறஞ்சேறியிறுத்த காதையின் அடிகளாலும் உரைகளாலும் நன்கு அறிந்துணரலாம். ஆக யாவற்றையும் அடைப்பினுள் எழுதிக்கண்டால் தெளிவுறுமாதலால் அவ்வாறே செய்வாம்.

| பழங்காலப் பெயர் | | பண்—க | தற்காலப்பெயர் |
|---|---|---|---|
| தாரப்பண் —— ஆசான்திறம் | | இடைக்காலப் பெயர் —— காந்தாரம் | மோகனம் |
| முதல் ஐந்திசைகள் முதல் நிரல் | அலகுகள் | தற்காலச் சுருதிப் பெயர்கள் | தற்கால இசைப் பெயர்கள் |
| தாரம் | 0 | ஆதார சுருதி | ஷட்ஜம் |
| குரல் | ௪ | நான்கு சுருதிகள் | சதுச்ருதிருஷபம் |
| துத்தம் | ௪ | இதனைச் சேர்த்து எட்டு சுருதிகள் | அந்தரகாந்தாரம் |
| உழை | ரு | இதனைச் சேர்த்து பதின்மூன்று சுருதிகள் | பஞ்சமம் |
| இளி | ௪ | இதனைச் சேர்த்து பதினேழு சுருதிகள் | சதுச்ருதிதைவதம் |
| மேனிலைத் தாரம் | ரு | இதனையும் சேர்க்க இருபத்திரண்டு சுருதிகள் | மேனிலைத் தார ஷட்ஜம் |

விளக்கம்-டுங

இவ்வாறு முதன்முதலாக, பண்ணுணர்ச்சியைத் தருகின்ற ஒருவகை ஐந்து இசைத்தொகுதியை பழந்தமிழ் மக்கள் தங்கள் அறிவின் தெளிவினால் பெயர்கூறியமைத்து வகைசெய்த காலமெல்லாம் இற்றைக்கு எத்துணையோ நூற்றாண்டுகளுக்கு முந்திய காலமாகும். காலவகையில் இசைத்தமிழ்ப் பகுதியே இப்பண்ணிலிருந்தே மிகவும் வளர்ச்சியடையத் தொடங்கியதாகும்.

ஆகவே, மிகப்பழங்கால இசைத்தமிழ்ப்பண்களில் முதலாய பண்ணும் தாரப்பண், நல்ல சிறப்பான காலத்தில் **ஆசான்திறம்** எனவும், சீரும் சிறப்பும் பொருந்தி வழக்கில் இருந்தும், ஆளுடைய பிள்ளையார் காலத்தில் **காந்தாரம்** எனப்பட்டு தற்காலத்தில் **மோகனம்** என்ற பெயரால் இருப்பது ஒன்றும் வியக்கத்தக்க செய்தியல்லவென்றே உணரவேண்டும். நாட்டின் வழக்கு நாட்டிலேயே இருப்பதில் வியப்பென்ன இருக்கக்கூடும்? காலவகையில் கைக்கொள்வார், அஃதும் நூலெழுதுவோரால் பெயர்மாற்றம் அடைவது இயற்கையேயாகும். புறக்கண்ணால் கண்டு நாடொறும் வாழ்ந்து துய்த்து வரும் ஊர்ப்பெயரும், பொருட்பெயர்களும், மலர்ப்பெயர்களும், இறைவன் பெயர்களுங்கூட மிகச்சிதறுண்டு வேற்றுமொழிப் பெயர்பெற்றதைவிட, ஒரேபுலன்—செவிப்புலனால் மட்டும் ஓர்ந்துணரத்தக்க வெறும் ஒலித்தொகுதிக்கு ஏன் பெயர்மாற்றம் காலவகையில் ஏற்படாது? மாறுபாடடைவதே இயற்கை. நாம் இப்பொழுது ஆராய்ந்து கூறுவதால் ஏதோ அறிவிற்கு எட்டியவரை எல்லாவற்றையும் கூறவேண்டியுளது. அவ்வளவே இதன் கருத்து.

ஆகவே, நம் தேவாரச்செழும்பதிகங்களில் கூறப்பெற்றுள்ள **காந்தாரப்பண், மோகனராகம்** என்று உறுதிசெய்துகோள்வோமாக. தேவாரப் பாடல்களைப் பாடும் முறை, மிகவும் பழைய முறை வழுவாது மிகத் தெளிவாகப் பாதுகாக்கப் பெறவேண்டும். தேவாரத்திற்கென ஒருதனிமுறை உண்டு என்பதை எற்றைக்கும் மறந்து வருதல் கூடாது.

சென்னைப் பல்கலைக்கழக இசைப்பேராசிரியர் அவர்கள் சென்னைத் தமிழிசைச் சங்கத்தின் பண் ஆராய்ச்சிக் கூட்டங்களில் மோகனராகம் மிகப்பழைய இராகம் என்றும் ஆனால் மோகனம் என்ற பெயர் கிட்டத்தட்ட முன்னூறு ஆண்டுகட்கு முன்னர் எந்த நூல்களிலும் காணப்படவில்லை என்றும் இராகம் பழமையாக நம் நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே வழக்கில் உள்ளது எனக்கூறி வருவது மிகவும் உண்மை நிறைந்த

கருத்தாகும். ஆதலால் பழைய தாரப்பண் எத்துணையோ காலங்களில் எத்துணையோ பெயர்வகையில் வழங்கி வந்திருக்கக் கூடுமன்றோ! எது எவ்வாறாயினும் இசைநிலை (ஸ்வரஸ்தானம்) மட்டும் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரும் ஒன்றேதான்; இக் காலத்தும் இனி எக்காலத்தும் ஒன்றேதான் என்பதை நன்கு உளத்தில் கொள்ளுதல் வேண்டும்.

விளக்கம்–௰௪

தாரம் - குரல் - துத்தம் - உழை - இளி என ஐம்புழைக் குழலொலிக்குப் பெயரிட்ட, பண்டைய இசைத்தமிழர்கள், நாளடைவில் வில்யாழ்க்கருவிமூலம் பத்து நரம்புகளைக்கட்டி மிகவும் நுண்ணிய முறையில் ஓர்ந்துணர்ந்ததை பழம்பெரும் புலவர்கள் "நரம்பின் தீங்குரல் நிறுக்குங் குழல்போல்" என்றெல்லாம் கூறி, கருத்துகளை நன்கு உறுதிப்படுத்தி வைத்தனர். இதன் விரிவெல்லாவற்றையும் அருட்டிரு. விபுலாநந்த அடிகளார் எழுதிய யாழ்நூலில் பரக்கக் காணலாம்.

குழற்கருவியிலும் யாழ்க்கருவியிலும் ஓர்ந்தோர்ந்து உணர்ந்த ஒலிவகைகளும் இடையொலி வகைகளும் நாளடைவில் கணித்தறிய முற்பட்ட காலத்தேதான் மீண்டும் இரண்டு இசைகள் ஒரே நிரலில் காண வாய்ப்பு ஏற்பட்டது. அவ்விசைகளிரண்டும் துத்தத்திற்கும் உழைக்குமிடையே ஒன்றும், இளிக்கும் மேனிலைத் தாரத்திற்கும் இடையே ஒன்றும் அமைக்க நேரிட்டன. இதன் கணித முறைகளை யாழ்நூலிலும் யாம் எழுதும் "முதல் ஏழிசைப்பெரும்பாலைகள்" எனும் நூலிலும் நன்கு காணலாம்.

புதிய இரண்டிசைகளின் பெயர்கள் :

ஒன்று கைக்கிளை

இரண்டாவது விளரி

இவ்விரண்டு இசைகளையும் தோற்றுவித்த முறைப்படி முன்னைய ஐந்திசைகளுடன் சேர்த்து எழுதியறிந்தால் —

தாரம் - குரல் - துத்தம் - **கைக்கிளை** - உழை - இளி - **விளரி** என நிற்கும்.

இந்நிரல், பண்டைய இசைத்தமிழில் முதல் ஏழிசைப் பெரும்பாலைகள் எனும் பிரிவில், முதல் ஏழிசைப்பாலையாகும்; அதாவது பெரும்பண்ணாகும். இப்பண்ணின் பெயர் மிகப் பழங்காலத்தில், மேன்மையானதும் முதன்முதற்றோன்றியதும் மிகச்செவ்வியதாயதுமான முதற்பாலையானமையினாலே மேற் **செம்பாலை** எனக்கூறியமைக்கப் பெற்றது. ஐந்திசைப்பண்களில்

முதற்பண் எவ்வாறு அறிந்து உணர்ந்து ஆசான்திறம் எனக் கூறப்பெற்றதோ, அதேபோன்று ஏழிசைப்பண்களில் முதற் பண்ணுய இது மேற்செம்பாலை எனக் கூறப்பெற்றது. இப் பாலையைக் கண்டறிந்த முறைமைகள் யாவும் அலகுகளை ஒத்த முறையிற் காண்பதற்கேயன்றி வேறொன்றுமேயில்லை. இனி இதனலகுகளையும் இசைகளையும் ஒருங்கே எழுதி அறிய—

தாரம் - குரல் - துத்தம் - கைக்கிளை - உழை - இளி - விளரி
0 - ச - ச - ச - க - ச - ச
என அமையும்.

விளக்கம்–டுரு

இப்பெரும்பண்ணின் அமைதியையும் அடைப்பினுள் எழுதியறியலாம்.

| பழங்காலப் பெயர் | | பண் — உ | தற்காலப் பெயர் |
|---|---|---|---|
| தாரப் பெரும்பண் —— மேற்செம்பாலை | | இடைக்காலப் பெயர்கள் பற்பலவாகவே | மேச கல்யாணி |
| முதல் ஏழிசைகளின் முதல் நிரல் | அலகுகள் | உள்ளன தற்காலச் சுருதிப் பெயர்கள் | தற்கால இசைப் பெயர்கள் |
| தாரம் | 0 | ஆதார சுருதி | ஷட்ஜம் |
| குரல் | ச | நான்கு சுருதிகள் இதனைச் சேர்த்து | சதுச்ருதிருஷபம் |
| துத்தம் | ச | எட்டு சுருதிகள் இதனைச் சேர்த்து | அந்தரகாந்தாரம் |
| கைக்கிளை | ச | பன்னிரண்டு சுருதிகள் இதனைச் சேர்த்து | பிரதிமத்யமம் |
| உழை | க | பதின் மூன்று சுருதிகள் இதனைச் சேர்த்து | பஞ்சமம் |
| இளி | ச | பதினேழு சுருதிகள் இதனைச் சேர்த்து | சதுச்ருதிதைவதம் |
| விளரி | ச | இருபத்தொரு சுருதிகள் இதனையும் சேர்க்க | காகலி நிஷாதம் |
| மேனிலைத் தாரம் | க | இருபத்திரண்டு சுருதிகள் | மேனிலை தார ஷட்ஜம் |

சென்ற இதழின் தொடர்ச்சி

# தொல்காப்பியம்

## சொல்லதிகாரம்

### சேனாவரையருரை விளக்கம்.

[பண்டித. சித. நாராயணசாமி, திருவையாறு]

"உயர்திணையவாமென்னும்...வரையறை யின்மையின்" என்பது ஆடூஉ, மகடூஉவறி சொற்களுக்குரிய 'சிவணி' யென்னும் வினையெச்சம் 'செய்து' என்னும் வினையெச்ச வாய்பாட்டிலடங்கும். 'செய்து, செய்யா, செய்யூ' என்னும் வாய்பாட்டு வினை யெச்சங்கள் மூன்றும் தம் வினை முதல் வினையால் முடிவு பெறும். (தன் கருத்தா வினையால் முடியும்) என்னு நியமமுண்டு. அங்ஙனமிருக்கச் சிவணியென்பது தன் கருத்தாக்களாகிய ஆடூஉ மகடூஉவறி சொற்களுக்கும் பிற கருத்தாவாகிய பல்லோரறி சொற்கும் உரிய (பொதுவான) 'உயர்திணைய' என்னும் வினையைக்கொண்டு முடிதல் பொருந்துமா? கொண்டு முடியும் வினை தன் கருத்தாக்களுக்கேயுரிய வினையாகவன்றோ இருத்தல் வேண்டும் என வினவிச் 'செய்து' என்பது முதலிய மூன்று வினையெச்சங்களும் தம் கருத்தாக்களின் வினைகளைக் கொண்டு முடியும், பிற கருத்தாக்களின் வினைகளைக்கொண்டு முடியா என்பதை 'மூதனிலை மூன்றும் வினைமுதல் முடிபின" (தொல் - சொல் - வினை) என்பதுணர்த்துகின்றதன்றித் தாம் கொள்ளும் வினைகள் தங்கருத்தாக்களுக்கேயுரிய வினைகளாக இருத்தல் வேண்டும், அவ்வினைகள் பிற கருத்தாக்களுக்குமுரியவாக இருத்தல் கூடாதென வுணர்த்தவில்லை. ஆதலால் 'உயர்திணைய' என்னும் வினை பல்லோரறி சொற்குரியதாதல் போல ஆடூஉ மகடூஉவறி சொற்களுக்குமுரியதாக நிற்றலின்

---

178ஆம் பக்கத் தொடர்ச்சி

இப்பெரும்பண், சிலப்பதிகாரக் காலத்தில் தாரங்குரலாய மேற்செம்பாலை எனத் தாரமுறையிலும், துத்தம் குரலாய மேற்செம்பாலையெனக் குரன்முறையிலும், விளரி குரலாய மேற்செம்பாலையென இளி முறையிலும் மூவகையாகக் கூறப்பட்டது. எவ்வகையிற் கூறப்பட்ட போழ்தினும் அலகுநிலைகள் அக்காலத்தும் இக்காலத்தும் ஒன்றேதான் என்பதை அறிதல் வேண்டும். இடைக்காலத்தில் இப்பண்ணின் பெயர்கள் கிரம வேறுபாடுகளால் மூர்ச்சனை (பாலை) முறையில் பலவகையாகக் கூறப்பட்டன. தண்டமிழ்நாட்டு ஆடன்மகளிர்கள் மிகப்பழங் காலமிருந்து இப்பெரும்பண்ணின் அமைப்பின் வழியே தங்கள் கலைத்திறனைக் காட்டுவது வழக்கமாம். (தொடரும்)

சிவணி யென்பது அதனைக் கொள்ளுதலிற் குற்ற மின்றென விளக்கமுற விடை பகர்கின்றது.

'வினைமுதல், கருத்தா' என்பன ஒரு பொருளன. "அல்லாக்கால்......அமையாவாமென்க" என்பது இவ்வாறு அவ்வெச்சங்கள் பொதுவாக வரும் வினைகளையும் கொள்ளலா மெனக் கொள்ளாது விட்டால் "இவனுமிவளுஞ் சிற்றிலிழைத் துஞ் சிறுபறை யறைந்தும் விளையாடுப" என்னுந் தொடர் முதலியன வழுவுடையனவாகிவிடும். அதாவது, இவ்வாறு கொள்ளாதொழியின், 'சிற்றிலிழைத்து' என்னும் பெண்ணிற் குரிய வினையெச்சமும் 'சிறுபறையறைந்து' என்னும் ஆணிற் குரிய வினையெச்சமும் 'செய்து' என்னும் வாய்பாட்டிலடங்கு வனவாதலால் தனித்தனி தன்தன் கருத்தாவிற்குரியவாக இருக்கும் வினைகளைக்கொள்ளாமல் இரு கருத்தாவிற்குமுரிய (பொதுவான) 'விளையாடுப' என்னும் வினையைக்கொள்ளுதல் போல்வன குற்றமின்றியனவாகக் கருதப்படா, என எடுத்துக் காட்டித் தன்தன் கருத்தா வினைகளைக்கொண்டு முடியுமெச் சங்கள், தாங்கொள்ளும் வினைகள் பிற கருத்தாவிற் குரியனவாக இருந்தாலும் தன்தன் கருத்தாவிற்குமுரியனவாக இருந்தாற் போதும். குற்றமில்லாதனவுமாகுமாதலால் 'சிவணி' யென்னு மிரண்டன் வினையெச்சம் "உயர்திணைய" என்னும் முச்சொல் லின் வினையைக் கொள்ள வைத்திருத்தல் குற்றமின்றென வலி யுறுத்தி வழுவமைக்கின்றது. 'செய்து, செய்யா, செய்யு' என்னு மூன்றெச்சங்களும் தன்தன் வினை முதல்களுக்கேயுரிய வினைகளைக் கோடல் வழா நிலையாகும். பொது வினையைக் கோடல் வழுவமைதியாகும், என்பது சேனாவரையர் கருத் தென்பது "அமையாவாம்" என்னு மவருரையாற் புலப்படு கின்றது.

"உயர்திணைச் சொல்......கருத்தாகக்கொள்க" என்பது, 'சொல்லதிகாரம்' என்னுந் தொடருள் சொல்லாவது இன்ன தென எழுத்ததிகாரத்துமிவ்வதிகாரத்தும் முன்னும் பின்னும் விளக்கியிருத்தலா லதனை விடுத்து அது தன் நிலைக்களமாகிய திணை வேறுபாட்டால் இருவகைப்படுமென முதனூற்பாவால் வகைப்படுத்தி உயர்திணைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் இன்ன என்பதையுமங்கேயே விளக்கி முதற்கணின்ற வுயர் திணைச் சொல் இத்துணையன என இந் நூற்பாவால் விளக்க வந்தவர் அவ்வாறே விளக்காமல் யாப்பிற்கேற்ப 'அம்முப்பாற் சொலுயர்திணைய" என மாற்றிக் கூறினார். கூறினரெனினும் உயர்திணைச் சொல்லது பாகு பாட்டையே இதன்கண் கூறு கின்றாரென்பது புலப்படுதலால் 'உயர்திணைய அம்முப்பாற்

சொல்' எனக் கூட்டி உயர்திணைச் சொல் ஆடூஉவறி சொல் முதலிய மூன்று பாகுபாடு படும் எனப் பொருள் கொள்ளல் வேண்டும். அவ்வாறு கொள்ளல் வேண்டுமென்பதுவே ஆசிரியர் கருத்தாதலின் அவ்வாறே பொருள் கொள்க என்கின்றது.

"இக்கருத்தானன்றே......உரைத்ததூஉமென்க" என்பது ஆசிரியர் உயர்திணைச் சொற்களினைத்தென வறிந்திருந்தும் அவை வினையொடு பொருந்துவதாகக் கூறியவிடத்துக் கொடுக்க வேண்டிய முற்றும்மையைக் கொடுத்துக் கூறாமல் "அம்மூப்பாற் சொல்" எனவே கூறியிருப்பினும் உயர்திணைச்சொல் மூன்று பாகுபாடு படுமென்பதை இந்நூற்பாவானுணர்த்துங் கருத்தினராய் யாத்தனரென்பது நன்கு புலப்படுதலாலன்றோ ஆசிரியர் கருத்தினை யுணர்ந்துரையுரைக்கவல்ல உரையாசிரியரும் "உயர்திணைச் சொல்லின் விரியை விரிப்புழி இத்துணையல்லது விரிபடா என்பது இந்நூற்பாவின்கண் கூறப்பட்டது" எனக் கூறினர். இன்றேல் லங்ஙனங் கூறார் எனத் தான் கொண்ட கொள்கை பொருத்தமென்பதற்குச் சான்று காட்டுகின்றாரெனக் குறிப்பிடுகின்றது.

'உரையாசிரியரும்' என்பதிலுள்ள உம்மை இறந்தது தழுவுதலோடு உயர்வையுஞ் சிறப்பிக்கின்றதாகும்.

"ஆடூஉவறிசொல்............யுணர்க" என்பது, ஒருவன் பிறன் ஒருவனுக்கு 'ஆ' என்பது இன்னதென அறிவிக்க விரும்பின் முதலில் கேட்பவன் ஆவென்பது ஒரு பொருளுண்டென்று (நிருவிகற்பமாக) அறியும்படி விலங்கினுள் 'ஆ' என்பதொன்றுண்டு எனப் பெயரளவாக எடுத்துக் கூறினால் அவன் அப்பெயருடைய விலங்கொன்றுண்டெனப் பொது வகையாக (நிருவிகற்பமாக) வுணர்ந்து பின் அஃதெப்படியிருக்குமென அதனியல்பைக் கேட்டறிந்து அவ்வாவினை நன்றாக அறிய விரும்புவான். அப்பொழுது அஃதலைதாடியோடு கொம்புடையதாகவுமிருக்குமென்றால் ஆவினை நேரிற் காணுதிருப்பினும் அதன் சிறப்புணர்வு ஒருவகையா லவனுக்குண்டாகும். பெயரளவில் ஒரு பொருளை முன்னருணர்ந்தவனுக்கே அப்பொருளி னிலக்கணத்தைத் தோன்றக் கூறின் அதன் சிறப்புணர்வு அவனுக்குண்டாகும். எடுத்தவுடன் ஒன்றனிலக்கணத்தை யெவ்வாறு கூறல் முடியும்; கூறினும் இன்னதற்காக இவன் கூறுகின்றான் என்பது எவ்வாறு புலப்படும்? புலப்படாதாகலின் முதலிற் பிண்டமாக வுணரும்படி, கூற விரும்பும் பொருளின் பெயரைக் கூறுதலின்றியமையாத தொன்றாதலின் ஆடூஉ வறிசொல் முதலியவற்றை முதலில் பெயரளவாக எடுத்துக் கூறினர். அதனை

யறியாமல் அங்ஙனங் கூறுதலெதற்கு? இலக்கணங் கூறும் நூற்பாக்களே போதுமே என்றல் பொருந்தாதென்கின்றது. ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல் என்பன வினைத்தொகை. அறிவிக்குஞ் சொல் என்பதுவே கருத்து.

"பெண்மை சுட்டிய......அந்தந்த மக்கிலவே" அதற்குரிய பாலாய்=உயர்திணைக்குரிய பால்களையுணர்த்து மீறுகளையுடைய வினைகளைக் கொள்ளுவனவாய், வேறுபட்டு = 'பேடி' யென்பது முதலிய சொற்கள் அலிப் பொருளைப் பொதுவாக வுணர்த்தாமல் அலிப்பொருளில் மிக்குள்ள பெண்மையைக் குறிப்பிடலால் பெண்மையையுணர்த்துவனவாயும் * தெய்வஞ் சுட்டிய பெயர்கள்' வேறோர் திணைப் பெயர்களாகாமல் உயர்திணைப் பெயர்களாயும் வேறுபட்டு, இசைக்கும்=நிகழும்.

"பால் வேறுபட்டிசைத்தலாவது......இசைத்தல்" என்பது பேடு என்னும் பொருள் மக்கட் சுட்டுடைமையால் உயர்திணையெனப்படும். அதன்கண் ஆண்டன்மையோ பெண்டன்மையோ ஒன்று நிரம்புதலின்றி யிருத்தலால் அது ஆடூஉ எனவும் மகடூஉ எனவும் படாது. படாமையால் அதனை யுணர்த்துஞ் சொற்களும் உயர்திணைச் சொற்களெனப்படினும் ஆடூஉ வறிசொல் மகடூஉ வறி சொல் பல்லோரறியுஞ் சொல் எனப்படா. அவற்றுட்பட்டடங்காமையால் உயர்திணைக்குரிய ஈற்றோடு கூடிய வினைகளை (முடிக்குஞ் சொற்களை)க் கொள்ளாமல் "உயர்திணை மருங்கினிலையினவாயினு மஃறிணை மருங்கிற் கிளந்தாங்கியலும்" என்றபடி அஃறிணைக்குரிய வினையைக்கொண்டு முடிவனவாகும். அலிப் பொருளையுணர்த்தும் பெயர்களுள் பேடி, பேடிமார், பேடியர், பேடிகள் என்பன, ஆண்டன்மைக் குறைந்து பெண்டன்மை மிக்குள்ளமையால் பெண்ணாகக் கருதப்படும் அலிப் பொருளை யுணர்த்துவனவாக வழங்கப்படுதலால் அவை அலி, மகண்மா, பேடு, அலிதூ என்னுமலிப் பெயரினீங்கி மகடூஉவை யுணர்த்தும் பெண், மகள், பெண்டாட்டி, மகள் நங்கை முதலிய உயர்திணைப் பெண்பாற்குரிய சொற்களுடன் சேர்ந்து அவை கொள்ளும் அன் ஆன் அள் ஆள் அர் ஆர் முதலிய இறுதிகளையுடைய வினைகளைக்கொண்டு நடத்தலே, பேடி முதலிய சொற்கள் பால் வேறுபட்டு இசைத்தலாகும் எனவும்,

* தெய்வஞ் சுட்டிய பெயர்கள் என்பன உம்பன் உம்பர் புலவன் புலவர் வானவன் வானவர் முதலியனவும் முருகன் மாயோன் முதலியனவுமாமென்க.

'தெய்வம்' என்பது மக்கட் சுட்டுடையதின்மையால் உயர்திணையினும் ஐயறிவின் மேம்பட்ட அறிவுடைமையால் அஃறிணையினுமடங்குவதாகக் காணப்படவில்லை. அத்தெய்வத்தையுணர்த்தும் பெயர்களை நோக்கினுல் அதனை வேறோர் திணைப் பொருளெனக் கொள்ளினுங்கொள்ளலாம். அங்ஙனமே கொள்ளலாமெனில் அப்பெயர்கள் கொண்டு முடியும் வினைச் சொற்களை நோக்கினுல் அவ்வாறு வேறோர் திணைப் பொருளாகக் கொள்வதற்கிடமில்லை. *அவ்வினைச் சொற்கள் இரு திணைச் சொற்களாகவே இருத்தலால் இரு திணையினு மடக்கலாமெனில் மக்களினுஞ் சிறந்த தெய்வத்தை அஃறிணையில் அடக்குதல் பொருந்தாது, உயர்திணையிலடக்குதல் பொருந்துமெனச் சான்றோர் கருத்திருத்தலால் அதனையுணர்த்தும் பெயர்களும் உயர்திணைப் பெயர்களுடன் சேர்ந்து அவைகள் ஆடூஉ வறிசொல் முதலிய மூன்று பிரிவாக அமைவதுபோலத் தாமுமமைந்து அவை கொள்ளும் "அன் ஆன் அள் ஆள் அர் ஆர்" முதலிய ஈறுகளையுடைய வினைகளைக்கொண்டு நடத்தலே தெய்வஞ்சுட்டிய பெயர்கள் (உம்பன் முருகன் வேந்தன் மாயோன் முதலிய பெயர்கள்) உயர்திணை மருங்கில் பால் வேறுபட்டிசைத்தலாகும் எனவும் அவ்விருவகைப் பெயர்களும் உயர்திணை மருங்கில் பால் வேறுபட்டிசைத்தலென்பது இன்னதென விளக்குகின்றது. எடுத்துக்காட்டில் 'பேடர்' என்பது ஒன்று காணப்படுகின்றது. அது பின்னர், "பேடியர் பேடிமார் பேடிகள் என்பனவும் அடங்குதற்கு" என எழுதுமிடத்துக் காணப்படாமையாலும் பெண்மை சுட்டுவதாகவே இன்மையாலும் 'பேடிமார்" என்பதுவே ஏடு எழுதுவோரால் மாற்றப்பட்டதாக காணப்படுதலின் 'பேடிமார்' எனத் திருத்தல் நலமாகும்.

" அலிப் பெயரினீக்குதற்கு அலிப்பெயர்—அலியென்னும் பொருளையுணர்த்தும் பெயர்கள். அவையாவன அலி, மகண்மா அலிது பேடு முதலியனவாகும். அவைகள் பெண்மை சுட்டா, ஆண்மையுஞ் சுட்டா என்க.

---

* தெய்வஞ்சுட்டிய பெயர்கள் உயர்திணைப் பெயர்களாயினும், மக்கட் சுட்டுடைய சில வுயர்திணைப் பெயர்கள் அஃறிணைப் பெயர்கள் போல நின்று அஃறிணை வினை கோடல்போல அவையுட் சில பெயர்களும் அஃறிணைப் பெயர்கள் போல நின்று அஃறிணை வினைகோடலுமுண்டு. அங்ஙனங் கோடல் "குடிமை யாண்மை" "காலமுலகம்" (தொல் - சொல் - கிளவி) என்பனவற்றுற் பெறப்படும்.

"உயர்திணை மருங்கின்" என்றமையால் ஈண்டு அலிப் பெயரென்றது உயர்திணை அலிப்பொருளையுணர்த்தும் பெயர் களையேயாமென்க.

மகடூஉப் பெயராவன—நங்கை, பெண் மகள், மகள் முதலிய பெயர்களாகும். இவைகளுணர்த்தும் பொருள் பெண்ணியல்பு முற்றுமுடைய பொருளாகும் என்பது வெளி.

"பெண்மை சுட்டிய......ஒழிக்கப்பட்டதாம்: அஃறிணை யில், 'பேடை' என்பது ஐகாரங் கெடக் குயிற்பேடு அன்னப் பேடு என நின்று பெண்மையை யுணர்த்துவதுபோல உயர்திணை யில் பேடு என்பது பெண்மையைச் சுட்டாதிருப்பினும் ஆண்மை திரிந்த பெண்மையைச் சுட்டினுஞ் சுட்டுமோ, பேடி யென்பது அதனடியாகத்தானே தோன்றியதாகும் என எழும் ஐயங்களை நீக்க, பேடு' என்பது 'தன்மைதிரிபெயராய் (அலிப்பெய ராய்)ப் பொதுவாக அலிப் பொருளை உணர்த்தலன்றி யுயர்திணை யில் எந்தப் பெண்மையையுஞ் சுட்டுவதாக வழங்கப்படாமையால் "பெண்மை சுட்டிய" என்ற அளவிலேயே அப்பேடு என்பதும் நீக்கப்பட்டதாகும், ஆதலாலதனை நீக்குவதற்கு வேறொரு 'அடை' வேண்டியதில்லையென்கின்றது.

ஆண்மைத் தன்மை குறைந்து பெண்மைத் தன்மை மிக் குள்ள அலிப் பொருளைப் பெண்ணாக வழங்குவதற்கு, 'பேடி', முதலிய சொற்களிருத்தல்போலப் பெண்மைத்தன்மை குறைந்து ஆண்மைத் தன்மை மிக்குள்ள அலிப் பொருளை ஆணாக வழங்கு தற்குரிய சொற்களில்லை; அவ்வாறாய பொருள் சிறுபான்மைய தாகலால்' எனக் கண்டமையால் "பெண்மை சுட்டிய......... ஆண்மை திரிந்த பெயர்நிலைக்கிளவி" என்றனரென்பார் "பெண்மை திரிதலு முண்டேனும்.........திரிந்த என்றூர்" என்றனர்.

நன்னூலிற் பெண்மை திரிந்த பேடு உளதெனக் கூறப் படினும் அதற்கு உரையில் எடுத்துக்காட்ட இலக்கியமின்மை யால், 'வந்தவழிக் காண்க' என எழுதுதல் காண்க.

(தொடரும்)